

புதுதில்லியில் இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களை நேற்று (22.01.2025) தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து திருச்சி மாவட்டம் மணப்பாறையில் வருகின்ற ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 வரை நடைபெறவுள்ள பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி குறித்த தகவல்களை தெரிவித்து, தற்போது நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளின் நிலை குறித்து எடுத்துரைத்தார்.உடன் பாரத சாரண சாரணியர் இயக்கம் தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால், பாரத சாரண சாரணியர் இயக்கம் தலைவர் அனில்குமார் ஜெயின், மாநில முதன்மை ஆணையர் பாரத சாரண சாரணியர் இயக்கம் முனைவர் க. அறிவொளி மற்றும் பாரத சாரண சாரணியர் இயக்கம் மாநில செயலர் முனைவர் பூ.ஆ.நரேஷ் ஆகியோர் உள்ளனர்.

### சுதந்திரப் போராட்ட வீரர்

# வாளுக்கு வேலி அம்பலம் சிலைக்கு மாலை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அணிவித்து மரியாதை!

சிவகங்கை, ஜன.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமி நாதன் நேற்று மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் நேற்றையதினம் (22.01.2025) நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலைக்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி தெரிவிக்கையில்,

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், சுதந்திரப் போராட்டத்தில் தனது பங்களிப்பையும், தியாகத்தையும் முழுமையாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தன் பொன்மொழிகளால் வரலாற்று சிறப்புக்களை நூல்களாக பொறித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினை நடத்திக் கொண்டிருக்கும், முதலமைச்சர் அவர்கள், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டதன் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக அன்னாரது பிறந்த நாள், அரசு விழாவாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு சிறப்பு சேர்த்திடும் வகையில், அன்னாருக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரம்பட்டியில் திருவுருவச்சிலை அமைக்கப்பதற்கென முதலமைச்சர் அவர்களால் கடந்த 22.01.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டு, அப்பணிகள் இனிதே நிறைவுற்று, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலை நேற்றையதினம் முதலமைச்சர் அவர்களால் வரலாற்று சிறப்புமிக்க சிவகங்கை மாவட்டத்திலேயே நேரில் வருகை புரிந்து கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பிற்குரியதாகும். இந்நிகழ்ச்சியில், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் சிலை அமையப்பெற்றுள்ள நகரம்பட்டியில் நானும் கலந்து கொண்டதில் பெருமிதம் கொள்கிறேன்.

மொழி, இனம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நினைவகங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் திருவுருவச்சிலைகள் ஆகியவைகளை அமைத்து, எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்கின்ற வகையில், சிறப்பான நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, தலைசிறந்த முதலமைச்சராக முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ராஜாஜி புரம் அருந்ததியர் குடியிருப்பு பகுதிகளில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப. செல்வராசு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி கூறி திண்ணை பிரச்சாரம் மூலம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், நெடுமாறன், மாமன்ற உறுப்பினர் தீபலட்சுமி, துரை, வடிவேல் ராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து சூரம்பட்டி பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வி. தங்கபாலு, கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு, முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், வீரமணி , மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார், காங்கிரஸ் ஆர்.எம்.பழனிச்சாமி, ஈ.பி.ரவி, கொ.ம.தே.க கோவிந்தராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, இமயம் சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

### மேயர்.பிரியாராஜன் தலைமை! துறைமுகம் தொகுதியில் பாக வாரியாக

# அமைச்சர் பி.கே.சேகர்பாபு 13-வது நாளாக மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

## தேவைகளைக் கேட்டறிந்தார்!

சென்னை, ஜன. 23 -

மேயர்.பிரியாராஜன் தலைமையில்,சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் பாகவாரியாக பதிமூன்றாவது நாளாக மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணத்தில் அமைச்சர் மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு மக்கள் தேவைகள் கேட்டறிந்தார்

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மான த்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர் வில்லி வாக்கம், வி.கநகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று பதிமூன்றாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் நேற்று (22-01-2025) மாலை 4.30 மணியளவில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 5 வது மண்டலம், வட்டம் 57 வது வட்டத்தில் மேயர் திருமதி. பிரியாராஜன் அவர்கள் தலைமையில், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ். ராஜசேகர், மண்டல குழு தலைவர் பி. ஸ்ரீராமலு ஆகியோர் முன்னிலையில், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, துறைமுகம் மேற்கு பகுதி, 57 வது வார்டு, பொதுமக்களை நேரில் சென்று பார்வையிட்டு அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.







**ரேஷன் கடைகளில் ஆய்வு!**

பின்பு வால்டாக்ஸ் சாலையில் தயாளு அம்மாள் தொண்டு நிறுவனம் இயங்கும் கட்டடத்தின் தரைத்தளத்தில் உள்ள மூன்று ரேஷன் கடைகளில் ஆய்வு மேற்கொண்டு அக்கடைகளின் பயனாளிகள் எண்ணிக்கையையும், பொருட்கள் சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்தும் தொடர்ந்து ஜட்காபுரம் பகுதியில் உள்ள நீத்தார் கடன் காரியக் கூடம், நீரேற்று நிலையம்(pumping station) சத்துணவு மையம், மின் பகிர்மான இடம் மற்றும் சமூக நலக்கூடத்தையும், ஆய்வு செய்து, அச்சமூக நலக் கூடத்தை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப உடற்பயிற்சி கூடமாக மாற்றுவதற்கு உறுதியளித்தார்.

**கோரிக்கைகளுக்கு தீர்வு!**

இந்த ஆய்வின் போது செய்தியாளர்களிடம் மேயர் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட இடத்தில் வசிக்கும் இம்மக்கள் மாற்று இடம் கேட்டு வைத்த கோரிக்கையை இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான அமைச்சர் அவர்கள் இத்தொகுதியில் குடிசை மாற்றுவாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் குடியமர்த்த அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றார், இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்களுடைய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக குறிப்பாக கழிப்பிடம் கூட இல்லாத நிலையில் இருந்த இவ்விடத்தில் இரண்டு கழிப்பிடங்களை கட்டி மாநகராட்சியால் சுத்தமாக பராமரிக்கப்படுகிறது என்றும் மற்றும் சிறு சிறு கோரிக்கைகளை உடனடியாக தீர்வு காண உத்தரவிட்டதாகவும் தெரிவித்தார்,

**மக்கள் பணியே முக்கியம்!**

மேலும் செய்தியாளர்கள் பரந்தூரை பற்றி கேட்ட கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அவர் வேலை எதையாவது ஊதி பெரிதாக்குவது ஆனால் மக்களிடையே தளராத அசைக்க முடியாத உறவை ஏற்படுத்திக் கொள்வதற்காக அனுதினமும் உழைத்துக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் அவர்கள் வழியில் மக்கள் பணியில் என்றும் ஈடுபடுவதே எங்களது வேலை என்றும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை பற்றி கேட்ட கேள்விக்கு பாராமுகமாக இருந்த வடசென்னையை வாடா சென்னையாக மாற்றுவதற்காக சுமார் 6000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 248 பணிகள் மேற்கொள்ளப்படுகிறது அதில் குறிப்பிடப்பட்ட பணிகளை இவ்வாண்டே முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்றார்.

இந்த ஆய்வின்போது 5 வது மண்டல அலுவலர் பரிதாபானு, மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின், வட்ட கழகச் செயலாளர்கள் செயலாளர்கள் ஜி.ராமமூர்த்தி, டி. சதீஷ்குமார் மற்றும் மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரிய அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தென்னிந்திய தொல் பொருள் வரலாற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி

# கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட வேண்டும்!

## நடவடிக்கை எடுக்கக் கோரி - ஒன்றிய அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜன. 23-

வடசென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி விராசாமி, தென்னிந்திய தொல்பொருள் வரலாற்றின் முக்கியத்து வத்தை எடுத்துக்காட்டி, கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொல்லியல் மற்றும் பண்பாட்டு துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தமிழ் நிலத்தின் தொல்பொருள் மரபுகள் மற்றும் பண்பாட்டுச் செல்வங்களை வெளிக்கொணர்வதற்கான முக்கியமான முயற்சியாக கீழடி அகழாய்வு விளங்குகிறது. 982 பக்கங்களுக்கு மேற்பட்ட விரிவான அறிக்கையை முனைவர் கே. அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையில் தயாரிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசிடம் தொல்லியல் ஆய்வு துறை (ASI) மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் கீழடி அகழாய்வின் வளர்ச்சி, கண்டுபிடிப்புகள், விஞ்ஞானப் பார்வைகள் மற்றும் கி.மு. 800 முதல் கி.பி. 300 வரை தென்னிந்தியாவின் பண்பாட்டு வரலாற்று வளர்ச்சியை விரிவாக விவரிக்கிறது.

இதன் மூலம் தமிழ்நாட்டின் தொல்பொருள் தளங்களின் மரபு மற்றும் பண்பாட்டு செல்வம் பொதுமக்கள் முன்னே வரும்.

கீழடி அகழாய்வு தமிழ்நாட்டின் வரலாற்று பெருமைகளை முக்கிய அடையாளமாக கருதப்படுகிறது. பல்லவர், சோழர், பாண்டியர், முத்தரையர் மற்றும் நாயக்கர் உள்ளிட்ட பழம் பெரும் அரசு களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தளங்களில் இருந்து கிடைத்துள்ள தரவுகள் எதிர்கால தலைமுறைகளுக்கான வழிகாட்டியாக இருக்கும்.



2024 பிப்ரவரியில், மதுரை உயர்நீதிமன்றம் பொது நல மனுவின் அடிப்படையில் மத்திய அரசுக்கு மூன்று மாதத்திற்குள் உடனடியாக வெளியிடும்படி ஆணை வழங்கியது மற்றும் அதன் விவரங்களை பொது மக்களுக்கு கிடைக்கச் செய்யவும் கூறப்பட்டது.

இந்த அறிக்கையின் வெளியீடு கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது தமிழர்களின் பண்பாட்டு செல்வத்தை உலகளவில் விளக்குவதில் முன்னேற்ற த்தை உருவாக்கும். மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த அறிக்கையை விரைவாக வெளியிட வேண்டும். இதன் மூலம் தமிழ்நாட்டின் தொல்பொருள் மரபுகளை பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். இத்துடன், கீழடி அகழாய்வு அறிக்கையை விரைவில் வெளியிட மத்திய அரசை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி விராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

இந்த கடிதத்தில் நகலை பிரதமர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5–இல், நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 5 | காங்கேயம் | கோகுல் திருமண மண்டபம், தாராபுரம். |
| | | | தாராபுரம் | |
| | மாலை 3.00 மணி | | மடத்துக்குளம் | ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை. |
| | | | உடுமலைப்பேட்டை | |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 22-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி